(4) காற்று அசுத்தப்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவைப்படும் உள்நாட்டுச் சாதனங்களைத் தயாரிப்பதற்கும், அவற்றை அமைப்பதற்கும், தொழிற்சாலைகளுக்கும், காற்று அசுத்தப்படுத்தப்படுவது குறித்து ஆய்வு செய்யும் நிறுவனங்களுக்கும், தேவையான உதவிகளை, மத்திய அரசும், மாநில அரசும் வழங்கவேண்டும் ;

(5) புள்ளி விவரங்களைத் தொகுத்துச் சேகரிப்பதற்கும், மனிதர்கள், கால்நடைகள், தாவரங்கள், பொருட்கள் ஆகியவற்றின்மீது காற்று அசுத்தப்படுவதனால் ஏற்படும் விளைவு குறித்து ஆராய்வதற்கும், மத்திய அதிகாரமன்றம் ஒன்றை நிறுவ வேண்டும்.

*Sheep Breeding Farm*

* 90 Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to set up a Centrally sponsored Sheep Breeding Farm in the State; and

(b) if so, the details of the same?

செம்மறி ஆடு இனப்பெருக்கப் பண்ணை

**திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், மத்திய அரசால் தொடங்கப்படும் செம்மறி ஆடு இனப்பெருக்கப் பண்ணை ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு எதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) செம்மறி ஆட்டுப் பண்ணை ஒன்றை உதக மண்டலத்தில் பெரிய அளவில் நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. இது மத்திய அரசு தொடங்கும் திட்டமாகும். இப்பண்ணைதானுகவே 6,000 முதல் 7,000 செம்மறியாடுகள் வரை வளர்க்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். இதற்காக கிடைக்கக்

கூடிய காட்டு நிலம் குறித்து விரிவான அறிக்கை ஒன்றை அனுப்பு மாறு வனத்துறைத் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது. அவரது பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எஸ். ஜெயாராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, இப் போது நம்முடைய மாநிலத்தில் எத்தனை 'பிரீடிங் பார்ம்' இருக் கிறது என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப் போது சின்னசேலத்தில் ஒன்றும், சாத்தூர் பக்கத்தில் ஒன்றும், சென்னைக்கு அருகே காட்டுப்பாக்கத்திலும் அமைந்திருக்கின்றன.

*Rajah Mirasdar Hospital, Thanjavur*

* 91 *Q*.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to shift the wards for medicine, surgery and paediatrics from Rajah Mirasdar Hospital to Thanjavur Medical College Hospital ; and

(*b*) if so, the reason therefor and the probable time as to when it may be carried out?

**தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவமனை**

**திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவமனையில் உள்ள மருந்துகள், அறுவை மருத்துவம், சிசு நல வார்டுகளை தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ? அவை எந்நாளன்று மாற்றப்படும் ?

**மாண்புமிகு திரு க. அன்பழகன் :** (அ) மருத்துவக்கல்லூரி இயக்குநர் அலுவலகத்தில் இது விபரம் பரிசீலனையில் உள்ளது.

(இ) ராஜா மருத்துவமனையில் நெருக்கடி மற்றும் மிகையான நோயாளிகளின் கூட்டத்தை குறைப்பது முக்கிய காரணமாகும்.

இத்திட்டம் எப்போது செயல்படும் என்று தற்போது கூறிவிட இயலாது.